ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் |
| திகதி | 2020.07.24 |

**சௌபாக்யா கொவிட்-19 மறுமலர்ச்சிக் கடன் வசதியின் கீழ் 2020 யூலை 13-23 காலப்பகுதியின் போது ரூ.11,829 மில்லியன் தொகையுடைய 3,985 புதிய கடன்களுக்கு மத்திய வங்கி ஒப்புதல் அளித்துள்ளது**

2020 யூலை 13-23 காலப்பகுதியின் போது சௌபாக்யா கொவிட்-19 மறுமலர்ச்சிக் கடன் வசதி கட்டம் II மற்றும் IIIஇன் கீழ் உரிமம்பெற்ற வங்கிகள் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட ரூ.11,829 மில்லியன் தொகையுடைய 3,985 புதிய கடன் விண்ணப்பங்களுக்கு இலங்கை மத்திய வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட புதிய ஒப்புதல்களின் மூலம் 2020 யூலை 23 வரை சௌபாக்யா கொவிட்-19 மறுமலர்ச்சிக் கடன் வசதியின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் இதுவரையிலும் ஒப்புதலளிக்கப்பட்ட கடன் விண்ணப்பங்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை 26,291ஆக அதிகரித்துள்ளது. அதேபோன்று, 2020 யூலை 23 வரை இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் மொத்தப் பெறுமதியும் ரூ.72,079 மில்லியனுக்கு அதிகரித்துள்ளது. 2020 யூலை 23 வரை கீழே அட்டவணை 1இல் காட்டப்பட்டவாறு தீவு முழுவதும் 18,007 கடன்பெறுநர்களுக்கு மத்தியில் ரூ.45,777 மில்லியன் தொகையினை உரிமம்பெற்ற வங்கிகள் ஏற்கனவே பகிர்ந்தளித்துள்ளன.

இலங்கை மத்திய வங்கியானது இலங்கை அரசாங்கத்தின் ஆலோசனையுடன் கொவிட்-19 நோய்த்தொற்றின் மூலம் மோசமாகப் பாதிக்கப்பட்ட சுயதொழில் மற்றும் தனிப்பட்டவர்கள் உள்ளடங்கலாக வியாபாரங்களுக்கென 6 மாதங்களைக் கொண்ட சலுகைக் காலப்பகுதியொன்று உள்ளடங்கலாக 24 மாதங்களைக் கொண்ட மீள்கொடுப்பனவுக் காலப்பகுதியுடன் ஆண்டுக்கு 4 சதவீத வட்டி வீதத்தில் தொழிற்படு மூலதனக் கடன்களாக மொத்தமாக ரூ.150 மில்லியன் தொகையினை வழங்குவதற்கு இவ்வசதியினை மூன்று கட்டங்களில் அறிமுகப்படுத்தியது.

கடன் திட்டத்தின் கட்டம் Iஇன் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு இலங்கை மத்திய வங்கி மீள் நிதியளித்தல் வசதியினை வழங்குகின்றது. கடன் திட்டத்தின் கட்டம் IIஇன் கீழ் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட பிணைய உறுதிகளுக்கெதிராக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு 1 சதவீத வட்டி வீதத்தில் இலங்கை மத்திய வங்கி கடன்களை வழங்குகின்றது. கடன் திட்டத்தின் கட்டம் IIIஇன் கீழ் வியாபாரங்களுக்கு அத்துடன்/ அல்லது தனிப்பட்டவர்களுக்கு கடன்களை வழங்குவதற்கு பங்கேற்கும் நிதி நிறுவனங்கள் தமது சொந்த நிதியங்களைப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் அவ்வாறு வழங்கப்படும் கடன்கள் மீது 50 சதவீத - 80 சதவீத வீச்சில் கொடுகடன் உத்தரவாதத்தினை இலங்கை மத்திய வங்கி வழங்கி அவர்களது கொடுகடன் இடர்நேர்வு மற்றும் நிதியச் செலவுகளை சமாளிப்பதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு ஆண்டுக்கு 5 சதவீத வட்டி உதவுதொகையினை வழங்குகின்றது.

கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட தொழில்களும் தனிப்பட்டவர்களும் மேற்குறிப்பிடப்பட்ட கடன் திட்டங்களின் கீழ் தமது கடன் விண்ணப்பங்களை தொடர்புடைய வங்கிகளுக்கு 2020 ஓகத்து 31 வரை சமர்ப்பிக்கலாம்.

அட்டவணை - 1

"சௌபாக்யா கொவிட்-19 மறுமலர்ச்சிக் கடன் வசதி" கடன் திட்டம்

2020.07.23இல் உள்ளவாறான முன்னேற்றம்

| பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் | இலங்கை மத்திய வங்கியினால் பதிவுசெய்யப்பட்ட மொத்த விண்ணப்பங்கள் | | உரிமம்பெற்ற வங்கிகள் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கடன்கள் | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | பெறுமதி (ரூ.மில்.) | எண்ணிக்கை | பெறுமதி (ரூ.மில்.) |
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் | 3,958 | 17,186 | 3,557 | 14,760 |
| இலங்கை வங்கி | 4,065 | 10,331 | 3,090 | 7,179 |
| அட்டன் நஷனல் வங்கி | 2,463 | 9,819 | 909 | 3,801 |
| மக்கள் வங்கி | 5,367 | 8,252 | 3,980 | 5,070 |
| சம்பத் வங்கி | 1,771 | 6,037 | 1,437 | 4,819 |
| செலான் வங்கி | 1,363 | 5,852 | 534 | 2,108 |
| நஷனல் டெவலப்மன்ட் பாங்க் | 955 | 5,328 | 529 | 1,963 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 4,209 | 2,283 | 2,500 | 1,132 |
| டிஎவ்சிசி பாங்க் | 654 | 1,585 | 529 | 1,148 |
| நேஷன் ரஸ்ட் பாங்க் | 184 | 1,413 | 154 | 1,127 |
| சனச டெவலெப்மன்ட் பாங்க் | 802 | 826 | 477 | 468 |
| பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் | 216 | 625 | 108 | 221 |
| அமானா வங்கி | 69 | 615 | 65 | 564 |
| யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு | 72 | 582 | 38 | 298 |
| ஹொங்கொங் அன்ட் சன்ஹாய் பாங்கிங் கோப்பரேசன் | 17 | 363 | 16 | 353 |
| டொயிஷ் பாங்க் | 6 | 140 | 6 | 140 |
| இந்தியன் பாங்க் | 14 | 137 | 13 | 136 |
| எம்சிபி பாங்க் | 9 | 116 | 4 | 79 |
| கார்கில்ஸ் பாங்க் | 10 | 94 | 7 | 72 |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 24 | 92 | 21 | 89 |
| சிற்றி பாங்க் | 4 | 88 | 4 | 88 |
| ஸ்டேட் பாங்க் ஒப் இந்தியா | 5 | 79 | - | - |
| ஸ்டான்டர்ட் சாட்டற் பாங்க் | 4 | 64 | 3 | 39 |
| பப்பிளிக் பாங்க் பேர்க்ஹாட் | 13 | 56 | 13 | 55 |
| இலங்கை சேமிப்பு வங்கி | 5 | 34 | 4 | 28 |
| எச்டிஎவ்சி | 29 | 30 | 7 | 13 |
| இந்தியன் ஓவசிஸ் பாங்க் | 2 | 27 | 2 | 27 |
| ஹபீப் பாங்க் | 1 | 25 | - | - |
| **மொத்தம்** | **26,291** | **72,079** | **18,007** | **45,777** |